**இரண்டா தவணைப் - 2019**

**மனைப்பொருளியல்**

**தரம் : 11** **பகுதி I** - விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | 4 | (11) | 1 | (21) | 1 | (31) | 4 |
| (2) | 2 | (12) | 3 | (22) | 4 | (32) | 3 |
| (3) | 3 | (13) | 4 | (23) | 3 | (33) | 3 |
| (4) | 4 | (14) | 1 | (24) | 2 | (34) | 2 |
| (5) | 3 | (15) | 3 | (25) | 4 | (35) | 3 |
| (6) | 1 | (16) | 2 | (26) | 2 | (36) | 1 |
| (7) | 4 | (17) | 4 | (27) | 1 | (37) | 4 |
| (8) | 4 | (18) | 2 | (28) | 3 | (38) | 2 |
| (9) | 2 | (19) | 3 | (29) | 4 | (39) | 3 |
| (10) | 1 | (20) | 3 | (30) | 2 | (40) | 2 |

**(1 * 40 = 40 புள்ளிகள)**

**பகுதி II**

(1) i.
* நிறப்பொருத்தத்திற்கேற்ப நிறப்பூச்சுக்களை பூசுதல்.
* மனைத் தளபாடங்களை உரிய இடங்களில் வைத்தல்.
* பொருத்தமான திரைச்சீலைகளை இடுதல்.
* பல்வேறு துணையணிகளை உபயோகித்தல்.

ii. அவர்களது குடும்பத்தில் காணப்படும் வளங்களை இனங்காணல்.

iii. நுகரப்பட்ட உணவுகள் சமிபாடு அகத்துறிஞ்சல் அனுசேபம் என்பவற்றுக்கு உட்பட்டு உடலுக்கு சக்தி, வளர்ச்சி, பாதுகாப்பு என்பவற்றிற்காகப் பயன்படுத்தப்படும் சகல செயற்பாடுகளும் போசணை எனப்படும்.

iv. உணவுக்கூம்பகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் இருந்து தெரிவுசெய்யவேண்டிய உணவுகளை அறிந்துகொள்ளலாம். அவ்வுணவுகளில் காணப்படும் போசணைகளுக்கு ஏற்ப உணவுகளைத் தெரிவுசெய்தல். உணவுவேளையில் உள்ளடங்கவேண்டிய அளவு தொடர்பான விளக்கம் உணவுத் தொகுதிகளில் அளவு அலகுரீதியாக உணவு கூம்பகத்தின் மூலம் அறியலாம்.

v. ஏதாவது இடத்திற்கு பிரதான மனைத்தளபாடங்களுக்கு மேலதிக அழகை ஏற்படுத்துவதற்காக அழகு, செயற்றிறன் ஆகிய இரண்டினையும் ஏற்படுத்துவதற்காகப் பயன்படுத்துப்படும் பொருட்கள் துணையணிகள் எனப்படும்.

vi. அடிப்படைத்தையல், அலங்காரத்தையல், நுட்பத்தையல்

vii. பைண்டிங்தைத்தல், பயிப்பிங்பிடித்தல், இரேந்தை பிடித்தல், சுருக்கு நாடா பிடித்தல்.

viii. நீளம் 52cm, அகலம் 52 cm

ix. பிரச்சனை தீர்க்கும் திறன், தர்க்கரீதியான சிந்தனை, ஆக்கத்திறன், முரண்பாடற்ற தெளிவான கருத்துக்களை வெளியிடும் திறன், முடிவெடுக்கும் திறன், தலைதைத்துவம்.

x. சூல்பருவம், முளையபருவம், முதிர் மூலவுருப்பருவம்

(2 x 10 = 20 புள்ளிகள்)

(2) i. பருத்திநார் - மிருதுவானது, மென்மையானது, அடிக்கடி சலவை செய்ய உகந்தது.

அழுத்தும்போது உயர்வெப்பத்தை தாங்கக்கூடியது. கூடிய உறிஞ்சும் தன்மை உடையது. (3 புள்ளிகள்)

ii. தளர்வுத்தன்மை, குறைந்த பொருத்துகள், எளிய பாங்கு முறை, அணிவதற்கும், களைவதற்கும் இலகுவானது. தட்டைப் பொருத்துகளாக இருத்தல், திறப்புகளில் நாடாக்கள் உபயோகித்தல், அலங்கரிப்பிற்காக எளிய காட்டுருக்களை உபயோகித்தல்

(3 புள்ளிகள்)

iii. தோள்பொருத்து தட்டைப்பொருத்து, திறப்பு, கழுத்து, கைக்குழைச்சடி, கீழ் விளிம்பு

(4 புள்ளிகள்)

(3) i. உடலுக்கு சக்தியை வழங்குவதும், உடல் வளர்ச்சிக்கு உதவுவதும், உடலை நோய்களில் இருந்து பாதுகாப்பதும், நஞ்சற்றதும், உடலினால் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான திண்ம, திரவ, அரைத்திண்ம பதார்த்தங்கள் உணவு எனப்படும்.

(3 புள்ளிகள்)

ii. நிரம்பிய ஓொழுப்பமிலம் என்பது காபன் பிணைப்பில் ஐதரசன் அணுக்கள் நிரம்பிக் காணப்படும்.
உதாரணம் : மிஸ்டிக் அமிலம், பாமிற்றிக் அமிலம், ஸ்தியரிக் அமிலம், கப்ரிலிக் அமிலம், லோரிக் அமிலம், பியூத்திரிக் அமிலம் (3 புள்ளிகள்)

iii. இரும்புச்சத்து நிறைந்த உணவுகள் சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.
கர்ப்பவதி தாய்க்குரிய போசணைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.
பல்வகைத் தன்மை காணப்படல் வேண்டும்.
மேற்கூறப்பட்ட வகையில் உணவுத்திட்டம் காணப்படல் வேண்டும்.

(4 புள்ளிகள்)

(4) i. நாம் நுகர்விற்காக பெற்றுக்கொள்ளும் உணவு உள்ளக, வெளித் தாக்கங்களுக்கு உட்பட்டு இரசாயன பௌதிக மாற்றங்களால் உணவுக்கே உரிய நிறம், சுவை, மணம், இழையமைப்பு, தோற்றம் என்பன மாற்றமடைந்து நுகர்விற்கு பொருத்தமற்ற நிலையை அடைகின்ற செயற்பாடு உணவு பழுதடைதல் ஆகும். (3 புள்ளிகள்)

ii. உலர்த்துதல் - துணை முறை – நீரகற்றல்

கோட்பாடு – நீரின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. நுண்ணுயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அளவு நீர் கிடைக்காமையால் வளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டு உணவ பாதுகாக்கப்படுகின்றது.
உப்பிடல் - துணைமுறை தற்காப்பு பதார்த்தம் இடல்

கோட்பாடு – P-H பெறுமானம் குறைவடையும் அமிலம் காரணமாக நுண்ணுயிர் வளர்ச்சி கட்டுப்படுத்தப்படும். (3 புள்ளிகள்)

iii. மாங்காய் சட்னி தயாரிக்கும் சரியான முறையை பாச்சட்கோட்டு படம் மூலம் காட்டுதல் வேண்டும். (4 புள்ளிகள்)

(5) i. நிதிவசதிகள், நிலத்தின் தன்மை, பிரச்சினையற்ற காணி உறுதி, உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுப்புறச் சூழல் (3 புள்ளிகள்)

ii. நிறச்சக்கரத்தில் மூலவர்ணம் என்பதுடன் அதன் இருப்க்கங்களிலும் உள்ள இரண்டு அல்லது மூன்று நிறங்களைச் சேர்ப்பதன் மூலம் இந்நிற இசைவைப் பெற்றுக்கொள்ளலாம்.

உ+ம்: நீலம் - நீலபச்சை, நீலஊதா

சிவப்பு – சிவப்பு ஊதா, நீல ஊதா (3 புள்ளிகள்)

iii. முகாமைத்துவ செயற்பாடு குறிப்பிடப்பட்டிருப்பின் (1 புள்ளி)

இச்செயற்பாடுகள் மூலம் குடும்பத்தின் தேவைகள் சந்தர்ப்பங்களுக்கேற்ப நிறைவேற்றக்கூடியதாகவும் அங்கத்வர்களிடமிருந்து கிடைக்கும் மனித வளங்கள் சரியானமுறையில் ஏனையவர்களின் கருத்துக்களுக்கேற்ப குடும்பத்தினரின் ஒத்துழைப்பினரோடு நிறைவேற்றக்கூடியதாக காணப்படுமிடத்து (3 புள்ளிகள்)

(6) **முறைசார்ந்த சமநிலை**:

i. ஏதாயினும் ஓர் இடத்தின் மையப்புள்ளியிலிருந்து இரண்டு பக்கங்களுக்கும் சமமான தூரத்தில் வடிவத்திலும், பாரத்திலும், அளவிலும், வடிவமைப்பிலும், நிறத்திலும் ஒன்றோடு ஒன்று சமமான பொருட்கள் இடப்படும் முறை.

**முறைசாரா சமநிலை**:

ஏதாயினும் ஓர் இடத்தின் வடிவத்திலும், அளவிலும், உயரத்திலும் ஒன்றோடு ஒன்று சமமற்ற முறையில் பொருட்கள் இடப்படும் முறை. (3 புள்ளிகள்)

ii. **நிலைக்குத்து கோடு**

உயரமான கம்பீரமான, நேரான, பலமான இயல்புகளை வெளிக்காட்டும்.

**வளைகோடு**

அழகான மகிழ்ச்சிகரமான அமைதியான மனங்களின் நுண்ணிய நெகிழும் தன்மையுடைய உணர்வுகளை வெளிக்காட்டும்.

**சரிவுக்கோடு**

குழப்பநிலை, அமைதியற்ற நிலை, செயற்திறன் (3 புள்ளிகள்)

iii. **எல்லை பேணல்**

மண்ணரிப்பைத் தடுக்கக்கூடிய வழிமுறைகளை மேற்கொள்ளல்.

நீர் வழிந்தோடக்கூடிய வழிமுறைகளை மேற்கொள்ளல்.

அலங்காரத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு முறைகளை மேற்கொள்ளல்.

(இரண்டு விடயங்கள் பெயரிட்டிருப்பின் 1 புள்ளி, விளக்கியிருப்பின் 3 புள்ளிகள்)

(7) i. உடல்நிலை: வயது, உடல் அமைப்பு, உளம்: பெற்றோராதலுக்கான உளமுதிர்ச்சி.

(3 புள்ளிகள்)

ii. கருக்கலைதல், குறைமாதக் குழந்தைபிறப்பு, குழந்தை இறந்துபிறத்தல், மந்தபுத்தியுள்ள குழந்தை பிறத்தல். (3 புள்ளிகள்)

iii. குருதிப் பரிசோதனை, போசணை மாத்திரைகள் வழங்குதல் (4 புள்ளிகள்)